முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2023 யூலை

## (301) நிதி அறிக்கையிடல்

(Financial Reporting)

2023-08-19
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 11
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**
  - (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
    *விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*
  - (2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
  - (3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*
  - (4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*
  - (5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  - (6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  - (7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு வேலைச்சட்டகமானது நிதிக் கூற்றுகள் மற்றும் நிதித் தகவல்களின் தரம்சார் பண்புகளைத் தயாரிப்பதில் மேற்கொள்ளப்படும் உள்ளார்ந்த எடுகோளாக இனங்காணப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு வேலைச்சட்டகத்தின்படி, இரண்டு (02) அடிப்படை தரம்சார் பண்புகளை (qualitative characteristics) **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் மேற்கொள்ளப்படும் உள்ளார்ந்த எடுகோளை **விபரிக்குக.**
(02 புள்ளிகள்)
(மொத்தம் 05 புள்ளிகள்)

### வினா 02

ஒருங்கிணைந்த அறிக்கையிடலின் முதன்மையான நோக்கம் நிதி மூலதனத்தை வழங்குபவர்களுக்கு ஒரு நிறுவனம் காலப்போக்கில் மதிப்பை எவ்வாறு உருவாக்குகிறது என்பதை விளக்குவதாகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

ஒருங்கிணைந்த அறிக்கையொன்றின் இரண்டு (02) பிரதான கூறுகளை (key elements) **விபரிக்குக.**
(05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட சிஸ்டெக் ஆலோசனை சேவைகள் (தனியார்) கம்பனி** தொழில்துறை சார்ந்த நிருமாணங்களுக்கான சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளது. கம்பனி வழங்குகின்ற அனைத்து சேவைகளையும் அளிப்பதற்காக ரூபா 7,500,000/- இற்கான கட்டண முன்மொழிவொன்று கம்பனியால் **B** என்ற சேவைநாடுநருக்கு வழங்கப்பட்டது.

ஒவ்வொரு சேவைகளுக்குமான பொருத்தமான கட்டணங்கள் கீழ்வருமாறு:

| | **ரூபா** |
|---|---|
| மண் பரிசோதனைச் சேவைக்காக | 500,000 |
| கட்டமைப்பு சார்ந்த பொறியியல் சேவைகளுக்காக | 2,500,000 |
| ஆரம்ப BOQ தயார்படுத்தல் சேவைக்காக | 3,000,000 |
| இயந்திரவியல், மின்னியல் மற்றும் நீர்க்குழாய் பொருத்தல் (MEP) சேவைகளுக்காக | 2,000,000 |

***நீங்கள் செய்யவேண்டியது :***

SLFRS 15 – வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம் என்ற நியமத்தின்படி, ஒவ்வொரு சேவைகளுக்கும் பரிவர்த்தனை விலை ஒதுக்கீட்டை (transection price allocation) **மதிப்பிடுக.**

(05 புள்ளிகள்)

## வினா 04

(a) LKAS 1 ஆனது நிறுவனத்தின் முந்தைய காலப்பகுதிகளுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் பிற நிறுவனங்களின் நிதிக் கூற்றுகள் இரண்டையும் ஒப்பீடு செய்வதை உறுதிப்படுத்துவதற்கு பொது நோக்க நிதிக் கூற்றுகளை முன்னிலைப்படுத்துவதற்கான அடிப்படையை குறித்துரைக்கிறது.

***நீங்கள் செய்யவேண்டியது :***

LKAS 1: நிதிக் கூற்றுகளை முன்னிலைப்படுத்தல் என்ற நியமத்தின்படி, பிற முற்றடக்க வருமானத்தின் மூன்று (03) பகுதிகளைக் (components) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) LKAS 19 ஆனது நான்கு வகையான ஊழியர் நன்மைகளை அடையாளங் கண்டுள்ளது. அதில் குறுங் கால ஊழியர் நன்மைகள் அறிக்கையிடல் காலப்பகுதி முடிவடைந்து பன்னிரெண்டு மாதங்களுக்கு முன்பு தீர்ப்பனவு செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

***நீங்கள் செய்யவேண்டியது :***

ஊழியர்களால் வழங்கப்படும் சேவைகளின் பொருட்டு, ஊழியர்களுக்குக் கிடைக்கும் குறுங்கால ஊழியர் நன்மைகளுக்கான இரண்டு (02) உதாரணங்களை **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

2023 மார்ச் 31 மற்றும் 2022 மார்ச் 31 ஆகிய திகதிகளில் **வரையறுக்கப்பட்ட லக் (தனியார்) கம்பனியின்** நிதி நிலைக் கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன:

**வரையறுக்கப்பட்ட லக் (தனியார்) கம்பனி**

**நிதி நிலைக் கூற்றுகள்** *(ரூபா '000)*

| மார்ச் 31 இல் | 2023 | 2022 |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துகள்:** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 20,000 | 13,000 |
| கழி: திரண்ட தேய்மானம் | (9,500) | (7,000) |
| **முன்கொணரற் பெறுமதி** | **10,500** | **6,000** |
| **நடைமுறைச் சொத்துகள்:** | | |
| தொக்குகள் | 15,670 | 13,670 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 12,750 | 14,780 |
| காசும் காசுச் சமானங்களும் | 2,800 | 1,900 |
| | **31,220** | **30,350** |
| **மொத்தச் சொத்துகள்** | **41,720** | **36,350** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும்:** | | |
| **உரிமையாண்மை:** | | |
| குறிப்பிடு மூலதனம் (100,000 சாதாரண பங்குகள்) | 10,000 | 10,000 |
| கைக்கொள் இலாபம் | 2,150 | 1,800 |
| | **12,150** | **11,800** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள்:** | | |
| நீண்ட காலக் கடன்கள் | 13,500 | 12,100 |
| ஊழியர் நன்மைகள் (பணிக்கொடைக்கான ஏற்பாடு) | 4,650 | 4,400 |
| | **18,150** | **16,500** |
| **நடைமுறைப் பரிப்புக்கள்:** | | |
| வியாபார சென்மதிகள் | 7,200 | 4,200 |
| குறுங்காலக் கடன்கள் | 2,420 | 2,450 |
| செலுத்த வேண்டிய வட்டி | 500 | 300 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 1,300 | 1,100 |
| | **11,420** | **8,050** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **41,720** | **36,350** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான வரிச் செலவினம் ரூபா 290,000/-. வரி மற்றும் வட்டிக்கு முன்னரான இலாபம் ரூபா 1,015,000/-. 2022 அக்டோபர் 31 இல் சாதாரண பங்குதாரர்களுக்கு இடைக்காலப் பங்கிலாபம் செலுத்தப்பட்டது.

(2) வட்டிச் செலவினமானது கடனுக்கான வட்டியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் அது 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு ரூபா 275,000/- ஆக அமைந்திருந்தது.

(3) தொழிற்சாலை உபகரணமொன்று 2022 ஏப்ரல் 01 இல் ரூபா 2.75 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனைத் திகதியில் கிரயமும் திரண்ட தேய்மானமும் முறையே ரூபா 2.9 மில்லியன் மற்றும் ரூபா 1.2 மில்லியன் என்பனவாகும். விற்பனை செய்யப்பட்ட உபகரணத்திற்கு மாற்றீடாக ஒரு புதிய உபகரணம் 2022 மே 01 இல் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அது அந்தத் திகதியிலிருந்தே மூலதனமாக்கப்பட்டது.

(4) ஆண்டின் காலப்பகுதியில் புதிய தொழிற்படு மூலதனக் கடன் ரூபா 1,500,000/- பெறப்பட்டது.

(5) ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 900,000/-.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட லக் (தனியார்) கம்பனியின்** காசுப் பாய்வுக் கூற்றினை <u>நேரில் முறையைப் பயன்படுத்தித்</u> **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 06

(A) சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி நிறுவனமான (SME) **வரையறுக்கப்பட்ட குளோவ் ஸ்பைசிஸ் (தனியார்) கம்பனி** அதன் தொழிற்பாட்டை 2015 இல் ஆரம்பித்தது. இந்தக் கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளரான **திரு. சில்வா** கீழ்வரும் விடயங்கள் பற்றிய தெளிவினைப் பெற்றுக் கொள்வதற்காக நிதி ஆலோசகர் ஒருவரை அணுகியுள்ளார்:

(1) கம்பனி அதன் தொக்குகளை அளவிடும்போது அனைத்து தொக்குகளையும் கிரயத்தில் மதிப்பிட்டுள்ளது. ஆயினும், தொக்குகளின் ஒரு பகுதி அறிக்கையிடல் திகதியின் பின்னர் கிரயத்தைவிடக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

(2) கம்பனி ரூபா 55 மில்லியன் பெறுமதியான ஒரு புதிய தொழிற்சாலைக் கட்டடத்தை நிருமாணித்துள்ளது. இதற்கு காலக்கடன் ஒன்றின் ஊடாக நிதியளிக்கப்பட்டது. இந்தக் கட்டடத்தில் வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் வரை கடன்பெறுகைக் கிரயம் ரூபா 2.75 மில்லியன் செலவழிக்கப்பட்டது.

(3) 2022 ஏப்ரல் 01 ஆந் திகதி தொடக்கம் கம்பனி அதன் பெறுமானத் தேய்விடும் முறையை குறைந்து செல்லும் மீதி முறையிலிருந்து நேர்கோட்டு முறைக்கு மாற்றியிருந்தது. இந்த மாற்றத்தினால் திரண்ட தேய்மானத்தில் ஏற்பட்ட தாக்கம் ரூபா 5.5 மில்லியன் ஆகும்.

கம்பனியின் நிதி ஆலோசகர் என்ற வகையில்,

**நீங்கள் செய்யவேண்டியது :**

SME களுக்கான SLFRS இன்படி, மேற்படி விடயங்கள் ஒவ்வொன்றும் எவ்வாறு கவனத்திற் கொள்ளப்படுகின்றன என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிக் கூற்றுகளைத் தயாரித்துள்ளது. 2023 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து கம்பனியின் கணக்காளராக நீங்கள் நியமிக்கப்பட்டுள்ளீர்கள்.

நிதிக் கூற்றுகளை மீளாய்வு செய்யும்போது, கீழ்வரும் நிகழ்வுகளை நீங்கள் அவதானித்துள்ளீர்கள்:

(1) கம்பனியின் இயந்திரமொன்று 2021 ஏப்ரல் 01 இல் ரூபா 4 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டது. இயந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாகும். இயந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலமானது 2022 ஏப்ரல் 01 இல் மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. அதில், 2022 ஏப்ரல் 01 இல் மீதமுள்ள பயன்தரும் ஆயுட்காலம் 8 ஆண்டுகளென வெளிப்பட்டது. இது 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளில் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

(2) 2023 மார்ச் 01 இல் அலுவலகப் பாவனைக்காக செய்யப்பட்ட கணினியொன்றின் கொள்வனவானது அலுவலகப் பராமரிப்புக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டது. கணினியின் கிரயம் ரூபா 300,000/- என்பதுடன் அதன் பயன்தரும் ஆயுட்காலம் 4 ஆண்டுகளாகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

LKAS 8 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் என்ற நியமத்தின்படி, **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** நிதிக் கூற்றுக்களில் மேற்படி இரண்டு நிகழ்வுகளும் ஏற்படுத்தும் தாக்கத்தை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

(a) **வரையறுக்கப்பட்ட விஷன் (தனியார்) கம்பனி** 2022 மே 01 இல் ஒரு புதிய கட்டடத்தை நிருமாணிக்க ஆரம்பித்தது. அது 2023 மார்ச் 31 இல் பூர்த்தியடைந்ததுடன் நிருமாணத்திற்குச் செலவழிப்பதற்காக 2022 ஏப்ரல் 01 இல் கீழ்வரும் கடன்கள் பெறப்பட்டிருந்தன:

| வங்கி | கடன் தொகை (ரூபா) | ஆண்டிற்கான வட்டி வீதம் |
|---|---|---|
| **ABC வங்கி** | 40 மில்லியன் | 16% |
| **PQR வங்கி** | 15 மில்லியன் | 18% |

நிருமாணத்திற்காகச் செலவழிக்கப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 50 மில்லியனாகும். கடன் பெற்றுக் கொள்ளப்பட்டு, அது பயன்படுத்தப்படும் வரை செய்யப்பட்ட முதலீட்டிலிருந்து 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த நிதி ஆண்டிற்காக ரூபா 1.1 மில்லியன் வட்டி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. கடன்களுக்கான மூலதன மீள்கொடுப்பனவுகள் 2023 ஏப்ரல் 01 இலிருந்து செய்யப்பட்டன.

**நீங்கள் செய்யவேண்டியது :**

LKAS 23 – கடன்பெறுகைக் கிரயம் என்ற நியமத்தின்படி, 2023 மார்ச் 31 இல் கட்டடம் தொடர்பில் மூலதனமாக்கப்பட வேண்டிய கடன்பெறுகைக் கிரயத்தைக் **கணிக்குக.** (06 புள்ளிகள்)

(b) LKAS 37 – ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள் என்ற நியமத்தின்படி, கீழ்வரும் சொற்பதங்களை **விபரிக்குக**:

(i) கடப்பாட்டு நிகழ்வு (An obligating event).

(ii) ஏற்பாடு (A provision). (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

கீழ்வரும் பரீட்சை மீதி 2023 மார்ச் 31 இல் **ரிச்சர்ட் PLC** இன் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப் பட்டுள்ளன:

**ரிச்சர்ட் PLC**

**2023 மார்ச் 31 இல் பரீட்சை மீதி** *(ரூபா '000)*

| | வரவு | செலவு |
|---|---:|---:|
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்:** | | |
| காணி | 70,000 | |
| கட்டடம் | 45,000 | |
| இயந்திரம் | 44,000 | |
| மோட்டார் வாகனங்கள் | 17,000 | |
| **2022 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம்:** | | |
| கட்டடம் | | 16,000 |
| இயந்திரம் | | 8,500 |
| மோட்டார் வாகனங்கள் | | 6,000 |
| 2023 மார்ச் 31 இல் தொக்கு – கிரயத்தில் | 47,000 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 16,500 | 6,500 |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 20,975 | |
| 2022 ஏப்ரல் 01 இல் ஐயக்கடன் ஏற்பாடு | | 1,400 |
| ஊழியர் நன்மைகள் (பணிக்கொடை ஏற்பாடு) | | 9,100 |
| முற்கொடுப்பனவுகள் | 12,000 | |
| விற்பனைக் கிரயம் / விற்பனை | 134,000 | 295,000 |
| பிற வருமானம் | | 7,100 |
| செலுத்திய வருமான வரி | 12,400 | |
| செலுத்த வேண்டிய வருமான வரி – 2022 ஏப்ரல் 01 இல் | | 3,250 |
| நிருவாகச் செலவினங்கள் | 35,000 | |
| விநியோகச் செலவினங்கள் | 27,000 | |
| நிதிச் செலவினங்கள் | 8,500 | |
| குத்தகைக் கொடுப்பனவு | 2,975 | |
| குறிப்பிடு மூலதனம் (12,000,000 சாதாரண பங்குகள்) | | 120,000 |
| கைக்கொள் இலாபம் - 2022 ஏப்ரல் 01 இல் | | 19,500 |
| | **492,350** | **492,350** |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2023 மார்ச் 31 இல், கம்பனியின் காணி ரூபா 75 மில்லியனாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. இது தொடர்பில் எவ்வித பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(2) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்பட வேண்டும். சொத்துகளின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| கட்டடம் | : | 50 ஆண்டுகள் |
| இயந்திரம் | : | 05 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | : | 05 ஆண்டுகள் |

(3) 2022 ஏப்ரல் 01 இல், கம்பனியானது ரூபா 15 மில்லியன் கிரயத்தில் ஒரு புதிய சரக்கு வண்டியை கொள்வனவு செய்தது. இதற்காக கம்பனி தமது சொந்த நிதியிலிருந்து ரூபா 7 மில்லியனை செலுத்தியிருந்தது. இது மோட்டார் வாகனக் கணக்கின் கீழ் பதிவு செய்யப்பட்டதுடன் மீதித் தொகைக்காக குத்தகை வசதியொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது. குத்தகை தவணைக் கட்டணங்கள் வருடாந்தம் ஆண்டின் இறுதியில் செலுத்தப்படுகின்றன. வருடாந்த குத்தகை வாடகை ரூபா 2,975,000/- ஆகும். குத்தகைக் காலம் 05 ஆண்டுகளாக இருப்பதுடன் உள்ளார்ந்த வட்டி வீதம் ஆண்டிற்கு 25% ஆகும். சரக்கு வண்டியின் உரிமையானது குத்தகைக் கால முடிவில் கம்பனிக்கு மாற்றப்படும். செய்யப்பட்ட குத்தகை வாடகைக் கொடுப்பனவு "குத்தகைக் கொடுப்பனவுக் கணக்கின்" கீழ் பதிவு செய்யப்பட்டதுடன் இந்த விடயம் தொடர்பில் கணக்கேடுகளில் வேறு எந்த கணக்கீட்டுப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(4) 1,000 அலகுகளைக் கொண்டுள்ள ரூபா 3,800,000/- கிரயமான தொக்குகள் மெதுவாக நகர்வது கண்டறியப்பட்டதுடன் இது 2023 மார்ச் 31 இலான தொக்கு மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்தத் தொக்கு 2023 ஏப்ரலில் விற்பனை விலையில் 50% கழிவுடன் விற்பனை செய்யப்பட்டது. அலகொன்றின் விற்பனை விலை ரூபா 6,000/- ஆகும்.

(5) கடந்த நிதியாண்டில் அறவிடமுடியாக் கடனாக பதிவழிப்புச் செய்யப்பட்ட ரூபா 800,000/- இனை கம்பனி இந்த ஆண்டில் வசூலித்திருந்தது. இந்தத் தொகை காசுக் கணக்கில் வரவுப் பதிவு (debited) செய்யப்பட்டதுடன் வியாபார வருமதிகள் கணக்கில் செலவுப் பதிவு (credited) செய்யப்பட்டது. மேலும், 2023 மார்ச் 31 இலுள்ள வியாபார வருமதிகள் மீதியில் 4% ஐயக்கடன் ஏற்பாட்டைப் பேணுவதற்கு முகாமையால் தீர்மானிக்கப்பட்டது.

(6) 2022 ஏப்ரல் 01 இல் அட்டுறுவான வருமான வரிப் பரிப்பு ரூபா 3,250,000/- ஆக இருந்ததுடன் வரிமதிப்பாண்டு 2022/2023 இற்கான மொத்த வருமான வரிப் பரிப்பு ரூபா 6,250,000/- ஆக இருக்குமென மதிப்பிடப்பட்டது. வரிமதிப்பாண்டு 2022/2023 காலப்பகுதியில் செய்யப்பட்ட அனைத்து வருமான வரிக் கொடுப்பனவுகளும் "செலுத்திய வருமான வரி" கணக்கில் தாக்கல் செய்யப்பட்டது.

(7) நிதியாண்டு 2022/2023 உடன் தொடர்புடைய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 500,000/- ஆனது கணக்கிற் கொள்ளப்படவில்லை என்பதுடன் முற்கொடுப்பனவுகள் கணக்கானது நாட்காட்டி ஆண்டு 2023 முழுமைக்குமாக செலுத்தப்பட்ட இறைகளை (rates) பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

(8) கம்பனியின் பணிப்பாளர் சபை நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக அதனை 2023 மே 31 இல் அங்கீகரித்திருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பிரசுரிப்பதற்குப் பொருத்தமான வடிவில், **ரிச்சர்ட் PLC** இற்காக கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று). (10 புள்ளிகள்)

(b) 2023 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று (08 புள்ளிகள்)

(c) 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று. (03 புள்ளிகள்)

(d) 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரண மாற்றங்களைக் காட்டும் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள். (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

கீழ்வரும் தகவல்கள் 2023 மார்ச் 31 மற்றும் 2022 மார்ச் 31 இல் / முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட ரஜரட்ட கம்பனியின்** நிதிக் கூற்றுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

**வரையறுக்கப்பட்ட ரஜரட்ட கம்பனி**

**வருமானக் கூற்றிலிருந்தான பிரித்தெடுப்பு** *(ரூபா '000)*

| **மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது** | **2023** |
|---|---|
| விற்பனை | 360,000 |
| விற்பனைக் கிரயம் | (223,200) |
| மொத்த இலாபம் | 136,800 |
| வட்டி மற்றும் வரிக்கு முன்னரான இலாபம் | 36,000 |
| வட்டிச் செலவினங்கள் | (12,500) |
| வரிக்கு முன்னரான இலாபம் | 23,500 |
| வரிக்கு பின்னரான இலாபம் | 18,095 |

**வரையறுக்கப்பட்ட ரஜரட்ட கம்பனி**

**நிதி நிலைக் கூற்றுகளிலிருந்தான பிரித்தெடுப்பு** *(ரூபா '000)*

| **மார்ச் 31 இல்** | **2023** | **2022** |
|---|---|---|
| **நடைமுறைச் சொத்துகள்:** | | |
| தொக்குகள் | 48,000 | 40,000 |
| வியாபார வருமதிகள் | 27,000 | 26,000 |
| காசும் காசுச் சமானங்களும் | 7,200 | 6,400 |
| **உரிமையாண்மை:** | | |
| குறிப்பிடு மூலதனம் (10 மில்லியன் சாதாரண பங்குகள்) | 100,000 | 100,000 |
| கைக்கொள் இலாபம் | 48,880 | 33,785 |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள்:** | | |
| நீண்ட காலக் கடன் | 16,000 | 24,000 |
| **நடைமுறைப் பரிப்புக்கள்:** | | |
| வியாபார சென்மதிகள் | 42,000 | 31,000 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 7,200 | 5,700 |
| | | |

கீழ்வரும் தொழில்துறைச் சராசரிகளும் கணிப்பிடப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| நடப்பு விகிதம் | 2 தடவைகள் |
| விரைவுச் சொத்து விகிதம் | 0.9 தடவைகள் |
| தொக்கு இருப்புக் காலம் | 55 நாட்கள் |
| கடன்பட்டோர் சேகிப்புக் காலம் | 30 நாட்கள் |

80% ஆன விற்பனைகளும் அனைத்து கொள்வனவுகளும் கடனடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன எனக் கருதுக.

***நீங்கள் செய்யவேண்டியவை :***

(a) 2023 மார்ச் 31 இல் / முடிவடைந்த ஆண்டிற்கான மேற்படி தகவல்களின் அடிப்படையில் **வரையறுக்கப்பட்ட ரஜரட்ட கம்பனியின்** கீழ்வரும் விகிதங்களைக் **கணிக்குக:**

(i) மொத்த இலாப விகிதம்

(ii) நடப்பு விகிதம்.

(iii) விரைவுச் சொத்து விகிதம்.

(iv) கடன்பட்டோர் சேகரிப்புக் காலம்.

(v) தொக்கு இருப்புக் காலம்.

(vi) நெம்பு விகிதம்.

(vii) வட்டிக் காப்பு.

(viii) பங்கிலாபக் காப்பு. (08 புள்ளிகள்)

(b) 2023 மார்ச் 31 இல் / முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட ரஜரட்ட கம்பனியின்** வினைத்திறனையும் (efficiency) திரவத்தன்மையையும் (liquidity) தொழில்துறைச் சராசரிகளுடன் **பகுப்பாய்வு செய்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

## வினா 10

**அமித்த PLC** ஆனது 2022 ஏப்ரல் 01 ஆந் திகதி **சமித்த PLC** இன் 80% ஆன சாதாரண பங்கு மூலதனத்தை ரூபா 500 மில்லியனுக்கு கொள்வனவு செய்தது. அதே நாளில், **சமித்த PLC** இன் இனங்காணத்தக்க நிகரச் சொத்துகளின் சீர் மதிப்பு ரூபா 600 மில்லியனாக இருந்ததுடன் கட்டுப்பாடற்றோர் நாட்டத்தின் சீர் மதிப்பு ரூபா 140 மில்லியனாகவும் இருந்தது.

2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **அமித்த PLC** மற்றும் **சமித்த PLC** ஆகியவற்றின் முற்றடக்க வருமானக் கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன:

**2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**முற்றடக்க வருமானக் கூற்று** *(ரூபா '000)*

| | **அமித்த PLC** | **சமித்த PLC** |
|---|---|---|
| விற்பனை | 1,050,000 | 550,000 |
| விற்பனைக் கிரயம் | (651,000) | (330,000) |
| **மொத்த இலாபம்** | **399,000** | **220,000** |
| **பிற வருமானம்:** | | |
| முகாமைத்துவக் கட்டணம் | 24,000 | |
| வட்டி வருமானம் | 25,000 | - |
| மோட்டார் வாகன விற்பனை மீதான இலாபம் | 42,000 | 14,500 |
| **செலவினங்கள்:** | | |
| விநியோகச் செலவினங்கள் | (109,000) | (79,000) |
| நிருவாகச் செலவினங்கள் | (135,000) | (95,000) |
| நிதிச் செலவினங்கள் | (45,000) | (6,000) |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | **201,000** | **54,500** |
| வருமான வரி | (12,500) | (8,400) |
| **ஆண்டிற்கான இலாபம்** | **188,500** | **46,100** |
| பிற முற்றடக்க வருமானம் | 14,000 | 16,000 |
| **மொத்த முற்றடக்க வருமானம்** | **202,500** | **62,100** |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) ஆண்டின் காலப்பகுதியில், **சமித்த PLC** ஆனது ரூபா 120 மில்லியன் கிரயமான பொருள்களை, கிரயத்தில் 20% இலாப எல்லை வைத்து **அமித்த PLC** இற்கு விற்பனை செய்திருந்தது. 2023 மார்ச் 31 இல், **சமித்த PLC** இடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 45 மில்லியன் பெறுமதியான தொக்குகள் விற்பனை செய்யப்படாது தொடர்ந்தும் **அமித்த PLC** இன் களஞ்சியத்தில் காணப்பட்டன.

(2) ஆண்டின் காலப்பகுதியில், முகாமைத்துவ ஆலோசனை சேவைகளை வழங்கிய **அமித்த PLC** இற்கு **சமித்த PLC** இனால் மாதாந்த முகாமைத்துவக் கட்டணம் ரூபா 2,000,000/- செலுத்தப்பட்டது.

(3) 2022 ஏப்ரல் 01 இல், **அமித்த PLC** ஆனது **சமித்த PLC** இற்கு ரூபா 10,000,000/- இற்கு விநியோக வாகனமொன்றை விற்பனை செய்தது. இது, விற்பனைத் திகதியில் **அமித்த PLC** இன் கணக்கேடுகளில் ரூபா 8,000,000/- முன்கொணரற் பெறுமதியைக் கொண்டிருந்தது. 2022 ஏப்ரல் 01 இல் விநியோக வாகனத்தின் எஞ்சியுள்ள பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாகும்.

(4) **சமித்த PLC** இன் தொழிற்படு மூலதனத் தேவைக்காக **அமித்த PLC** இனால் வழங்கப்பட்ட கடன் மீது **சமித்த PLC** இடமிருந்து வட்டியை உள்ளடக்கிய வட்டி வருமானம் ரூபா 5 மில்லியன் கிடைக்கப் பெற்றது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) **சமித்த PLC** இன் கொள்வனவு மீதான நன்மதிப்பைக் (goodwill) **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த முற்றடக்க வருமானக் கூற்றைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

(மொத்தம் 13 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |